**செயற்பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், அரியலூர் அவர்களின் செயல்முறை**

முன்னிலை:- **திரு.இரா.மணிவண்ணன், பி.இ.,**
செயற்பொறியாளர், பொ.ப.து,

**செயல் முறை கடித எண்.07/ 2023 / நி.உ.2/(602/2020) / நாள்: 09.01.2023**

பொருள்: நியமனம் - நேரடி நியமனம் - த.நா.அமைச்சுப் பணித்தொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-19 மற்றும் 2019-20 ஆதட ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV -இல் பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் பணிநியமனம் - **திரு.மா.மணிவேல், இளநிலை உதவியாளர் (Conditional Appointment) – சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை வரப்பெற்றது** - இளநிலைஉதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளில் **பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் துவங்கி ஆணை வழங்குதல்** - தொடர்பாக.

பார்வை:1.செயலாளர், தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித.எண்..2496 / PSD-I / 2020 / நாள்.29.05.2020..

2.முதன்மைதலைமைப்பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண். எஸ்.3(3) / 35935 / 2020 / நாள்.17.09.2020..

3.தலைமைப்பொறியாளர், பொபது., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2) / 5055/ 2020-13/ நாள்: 22.09.2020.

4.கண்காணிப்புப்பொறியாளர்,.பொ.ப.து கட்டட(கமப) வட்டம், சேலம் அவர்களின் செயல்முறை ஆணை எண்: நி.உ.2 /1825/ 2022-2/ நாள் 23.09.2020.

5.இக்கோட்ட செ.மு.க.எண்:: 602 /2020-2/நி.உ.2/நாள்: 26.09.2020.

6. தலைவர், மாநில அளவிலான மீளாய்வுக்குழு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை அவர்களின் செ.மு.எண்: 747/CV-3/2021-3/நாள்: 13.12.2022.

** ** **

பார்வை (1) -இல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி, ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி - IV - 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுகளுக்கான தேர்வில் தேர்ச்சி பெற்று, பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-இல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, இக்கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.மா.மணிவேல், இளநிலைஉதவியாளர், இக்கோட்ட அலுவலகத்தில் 26.09.2020 முற்பகல் முதல் இளநிலைஉதவியாளர் பணியிடத்தில் பணியேற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

த.பி.பா

மேலும், திரு.மா.மணிவேல், இளநிலைஉதவியாளரின் பணிநியமனம் பழங்குடியினர் வகுப்பை சார்ந்தவர்களுக்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் (**Conditional Appointment**) வழங்கப்பட்டுள்ளதால், தனியரது சாதிச்சான்றிதழின் மெய்த்தன்மை சான்று உரிய துறையிடமிருந்து (தலைவர், மாநில அளவிலான மீளாய்வுக்குழு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை) பெறப்பட்ட பின்பு இவரது பணியினை பணிவரன்முறை செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பார்வை (1) -இல் காணும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சென்னை அவர்களின் கடிதம் மற்றும் பார்வை 2-இல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர் நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, முறையே பணிநியமனம் மற்றும் பணியமர்வாணை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பார்வை 6-இல் காணும் தலைவர், மாநில அளவிலான மீளாய்வுக்குழு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை அவர்களது செயல்முறை ஆணையின் மூலம் திரு.மா.மணிவேல், இளநிலை உதவியாளரின் சாதிச்சான்றிதழின் மெய்த்தன்மை சான்று வரப்பெற்றுள்ளது.

எனவே, மேற்கண்ட செயல்முறை ஆணையின் அடிப்படையில் இவருக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் பணிநிபந்தனைகள் சட்டம் **2016-** பிரிவு **28**-இன்படி தனியர் பணியில் சேர்ந்த நாளான **26.09.2020** முற்பகல் முதல் இவரது பணியினை பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது. மேலும், இவரது பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி- IV - இன் தொடர்பக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

இவர் பணியேற்ற நாளான 26.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளதால், இவரது தகுதிகாண்பருவ காலம் 26.09.2020 முற்பகல் முதல் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணியில் ஈராண்டுக்கான தகுதி காண் பருவம் முடிக்க வேண்டும் என்றும், தனது தகுதிகாண்பருவ காலத்தில் அரசு அலுவலர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-

செயற்பொறியாளர், பொ.ப.து
கட்டடம் (க& ப) கோட்டம், அரியலூர்.

பெறுநர்

திரு.மா.மணிவேல்,
இளநிலைஉதவியாளர்
கோட்ட அலுவலகம்.

நகல்: பணிப்பதிவேடு
நகல்: கோப்புக்கு

நகல் : முதன்மை தலைமைப்பொறியாளர் மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் : தலைமைப்பொறியாளர், பொபது., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல் : கண்காணிப்புப்பொறியாளர், பொபது., கட்டட(கமப) வட்டம், திருச்சி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

ப் காணும்
**கடித நகல் - 1 எண்.**

9/1/23

செயற்பொறியாளர், பொ.ப.து
கட்டடம் (க& ப) கோட்டம், அரியலூர்

9/1/23